**09.11.2022**

**OS.No. 311/2021 PW : 2, திரு. அமுல்ராஜ்**

**குறுக்கு விசாரணை...**

முதல் விசாரணையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி தான் சாட்சி சொல்ல அழைத்து வந்தார். சாட்சி சொல்ல எனக்கு அழைப்பானை வரவில்லை. வழக்கு பற்றி எனக்கு என்ன தெரியும் என்று கேட்டால் வாதி புஷ்பா என்பவருக்கு பணம் கொடுத்தார். என் சொந்த ஊர் திருவள்ளூர். வாதி திருவாலங்காட்டை சேர்ந்தவர். வாதியை எப்படி தெரியும் என்று கேட்டால் அவர் என்னுடன் வேலை பார்க்கிறார். நாங்கள் ரயில்வேயில் வேலை பார்க்கிறோம். புஷ்பா என்பவரை எப்படி தெரியும் என்று கேட்டால் அவர் வாதியின் வீட்டில் வாடகைக்கு இருக்கிறார். வாதியை கடந்த 6 வருடங்களாக தெரியும். நான் எதற்காக சாட்சியம் அளிக்க வந்தேன் என்று கேட்டால் நான் முதல் சாட்சியாக கையொப்பம் போட்டதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதில் சாட்சி கையொப்பம் போட்டேன் என்று கேட்டால் கடன் பத்திரத்தில் கையொப்பம் போட்டேன். கடன் பத்திரம் 6, 7 பத்திரம் இருக்குமா என்று கேட்டால் அது 2 பக்கம் ஆகும். நான் ஒரே ஒரு கையொப்பம் மட்டும் போட்டேன். நான் கையெழுத்து போட்ட ஆவணத்தை படித்து பார்த்தேன். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று கேட்டால் புஷ்பா என்பவர் ரூபாய் 6½ லட்சம் கடன் வாங்கியதாக போட்டிருந்தது. நான் கையெழுத்து போடும்போது யார் யார் இருந்தார்கள் என்று கேட்டால் வாதி, புஷ்பா, நானும், வாதியின் மகனும் இருந்தோம். அப்போது மாலை சுமார் 5.00 மணி இருக்கும். 2020 அக்டோபரில்

கையொப்பம் போட்டேன். அன்றையே தினம் நான் ரயில்வேயில் வேலைக்கு சென்று வேலை முடிந்தபின்னர் மாலையில் கையொப்பம் போட்டேன். நான் ஷிப்டின் அடிப்படையில் வேலை பார்க்கவில்லை. பொதுவான வேலை நேரம் ஆகும். காலை 8.00 மணிமுதல் மாலை 4.30 மணிவரை என்னுடைய வேலை நேரம் ஆகும். நான் அரக்கோணத்தில் அப்போது வேலை செய்து கொண்டிருந்தேன். அன்று என்ன கிழமை என்று எனக்கு ஞாபகமில்லை. ரயில் நிலையத்திலிருந்து வாதியின் வீட்டிற்கு செல்ல சுமார் 10 நிமிடம் ஆகும். நான் கையெழுத்து போடும்போது வாதிக்கும் புஷ்பாவிற்கும் இடையே பணப்பட்டுவாடா இருந்ததா என்று கேட்டால் வாதிக்கு பணம் கொடுத்ததை நான் பார்தேன். ரூபாய் 6½ லட்சம் கொடுத்ததை நான் பார்த்தேன். அது எவ்வளவு ரூபாய் நோட்டுக்கள் என்று எனக்கு தெரியாது. அந்த பணத்தை வாதி வீட்டில் வைத்திருந்தார். புஷ்பா எதற்காக கடன் வாங்கினார் என்று அந்த ஆவணத்தில் இருக்கிறதா என்று கேட்டால் அந்த விவரம் இல்லை. அந்த ஆவணத்தை யார் தயார் செய்தார் என்று கேட்டால் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்தார்கள். எப்படி தயார் செய்து வைத்திருந்தார்கள் என்று கேட்டால் தமிழில் டைப் செய்து வைத்திருந்தார்கள். ஆவணத்தின் முதல் பக்கத்தில் யார் கையொப்பம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணம் எந்த மாதிரியான ஆவணம் என்று கேட்டால் முதல் பக்கம் 20 ரூபாய் முத்திரை தாளில் இருந்தது. 2வது பக்கம் பச்சை காகிதம் ஆகும். முதல் பக்கமும், 2வது

பக்கமும் டைப் செய்யப்பட்டிருந்தது. நான் கையொப்பம் போட்ட பின்னர் வாதியின் மகன் சுரேந்திரன் கையொப்பம் போட்டார். அதன்பிறகு என்ன நடந்தது என்று கேட்டால் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் 2வது பக்கத்தில் நான் கையொப்பம் போட்டேன். நான் கையொப்பம் போடும்வரை அந்த ஆவணத்தில் கையால் எழுதவில்லை. புஷ்பா பழ வியாபாரம் செய்ததால் அவர் வியாபாரத்திற்கு கடன் வாங்கினார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். அரக்கோணத்திலிருந்து திருவாலங்காடு வருவதற்கு ரயிலில் 15 நிமிடம் ஆகும். அலுவலகத்திலிருந்து வரும்பொழுது நாங்கள் கையொப்பம் போட தேவையில்லை. அன்றைய தினம் வாதியும் வேலைக்கு வந்திருந்தார். வருகை பதிவேட்டில் நாங்கள் வேலைக்கு போகும்போது கையொப்பம் போடவேண்டும். காலையிலும், மதியத்திலும் வருகையை ஒப்பிடுவார்கள். அந்த ஆவணத்தில் உள்ள முத்திரை தாளை யார் வாங்கினார்கள் என்று நான் படித்து பார்க்கவில்லை. புஷ்பா வாதியிடம் பணமே வாங்கவில்லை என்றும் வாதி என்னுடன் வேலை பார்ப்பதால் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கதக்கதில்லை என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.